V6M

விருதுநகர் மாவட்டம்

மூன்றாம் இடைப் பருவத் தேர்வு - 2025

-----

# வகுப்பு 6

நேரம் : 1.00 மணி | **கணிதம்** | மதிப்பெண்கள்: 30

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **4×1=4**

1) $\frac{53}{17}$ இன் தலைகீழி

a) $\frac{53}{17}$ b) $5\frac{3}{17}$ c) $\frac{17}{53}$ d) $3\frac{5}{17}$

2) $\frac{6}{7} = \frac{A}{49}$ எனில் Aஇன் மதிப்பு என்ன?

a) 42 b) 36 c) 25 d) 48

3) −7இன் வலதுபுறம் 1 அலகு தொலைவில் உள்ள எண்

a) +1 b) −8 c) −7 d) −6

4) ஒரு செவ்வகத்தின் ஒவ்வொரு பக்கமும் இரு மடங்காகும் போது அதனுடைய பரப்பளவு _______ மடங்காகும்

a) 2 b) 3 c) 4 d) 6

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** **3×1=3**

5) ________ என்ற எண்ணிற்கு அந்த எண்ணே தலைகீழாக அமையும்.

6) முக்கோணத்தின் பரப்பளவு ________

7) சதுரத்தின் சுற்றளவு ________.

**III. சரியா/தவறா எனக் கூறுக:** **3×1=3**

8) தகா பின்னத்தின் தகைகீழ் எப்போதும் ஒரு தகுபின்னமாக இருக்கும்.

9) −10 மற்றும் 10 ஆகியவை 1இலிருந்து சமதொலைவில் உள்ளன.

10) எல்லா முழுஎண்களும் முழுக்களே.

**IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **4×2=8**

11) $5\frac{3}{7}$ ஐத் தகா பின்னமாக மாற்றுக.

12) பெருக்குக: $3\frac{5}{7}\times1\frac{1}{13}$

13) எண்கோட்டினைப் பயன்படுத்தி −6ஐ விட 5 அலகுகள் கூடுதலான முழுவை எழுதுக.

14) பின்வரும் எண்களுக்கு எதிரெண் காண்க: (i) 44 (ii) −19

15) 3 செ.மீ., 4 செ.மீ., மற்றும் 5 செ.மீ. பக்க அளவுகள் கொண்ட ஒரு முக்கோணத்தின் சுற்றளவு காண்க.

16) நிரப்புக: (i) 5 செ.மீ.$^2$ = _______ மி.மீ.$^2$ (ii) 8 கி.மீ.$^2$ = ______ மீ$^2$.

**V. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி:** **4×3=12**

17) ஒரு தகர எண்ணெய் பெட்டியில் $3\frac{3}{4}$ லிட்டர் எண்ணெய் இருந்தது. அதிலிருந்த $2\frac{1}{2}$ லிட்டர் எண்ணெய் பயன்படுத்தப்பட்டுவிட்டது எனில், எவ்வளவு எண்ணெய் மீதம் இருக்கும்.

18) 6 மீ. நீளமுள்ள கம்பியினை $1\frac{1}{2}$ மீ நீளமுடைய சிறிய கம்பிகளாக வெட்டினால் எத்தனை சிறிய கம்பிகள் கிடைக்கும்?


19) பின்வரும் முழுக்களை ஏறுவரிசையில் எழுதுக:

−28, 6, −5, −40, 8, 0, 12, −1, 4, 22

20) 6 மீ நீளமும் 4 மீ அகலமும் கொண்ட செவ்வகத்தின் சுற்றளவு மற்றும் பரப்பளவு காண்க.

21) ஓர் எண்கோட்டில் 0 மற்றும் −8 ஆகிய எண்களின் முன்னி மற்றும் தொடரியைக் காண்க.

22) பின்வரும் 'L' வடிவ அட்டையின் சுற்றளவு மற்றும் பரப்பளவு காண்க.




---------